DECEMBER 2024 **P/ID 35315/PTL1E**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. திருக்குறள் - பெயர்க்காரணம் கூறுக.

2. திருவள்ளுவர் குறிப்பிடும் மும்மை குறித்து எழுதுக.

3. 'குறுகத் தறித்த குறள்' குறித்து ஔவையார் கூறியது யாது?

4. ஊழியல் - பொருள் தருக.

5. 'இறைவன் அடிசேரா தார்' - யார்?

6. 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' - ஏன்?

7. 'இறை என்று வைக்கப்படுபவர்' - எவர்?

8. கண்ணுடையவர் புண்ணுடையவர் - ஒப்பிடுக.

9. சொல் வன்மை குறித்து எழுதுக.

10. ஒழிபியல் - குறிப்பு வரைக.

11. களவு - பெயர்க்காரணம் கூறுக.

12. பசலை - விளக்கம் தருக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே
250 சொற்களில் விடை எழுதுக.

13. திருவள்ளுவரின் வரலாற்றை எடுத்துரைக்க.

14. திரவள்ளுவமாலையைத் திறனாய்க.

15. விருந்தோம்பலின் சிறப்பு இயல்புகளை வள்ளுவரின் வழிநின்று விளம்புக.

16. ஊக்கம் உடைமை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

17. வள்ளுவர் குறிப்பிடும் தூதின் இலக்கணத்தை எடுத்தியம்புக.

18. நோயின்றி வாழ வள்ளுவர் தரும் உபாயங்களைத் தொகுத்து எழுதுக.

19. குறிப்பு அறிதலை வள்ளுவரின் வழிநின்று விளம்புக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே
500 சொற்களில் விடை எழுதுக.

20. திருக்குறளின் சிறப்புகளை விவரிக்க.

21. இல்லறவியலின் நோக்கும் போக்கும் குறித்துக் கட்டுரைக்க.

22. வள்ளுவரின் அரசியல் பார்வை இன்றைய காலச்சூழலுக்கு பொருந்துமா? என்பதை ஆய்க.

23. பண்புடைமையின் சிறப்புகளை ஆய்க.

24. குறிப்பறிதல் அதிகாரம் உணர்த்துவனவற்றை விளக்குக.

———————